**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 152/2019

Name : Adhamsha

P.W. : 6

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது பழநியில் வசித்து வருகிறேன். கடந்த 13.10.2018ம் தேதி கணியூர் காவல் நிலைய நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று வீரபாண்டி மகன் மாரிமுத்து என்பவரின் விபத்து பதிவேடு பெற்று விசாரித்து அவர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிந்து கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த கடத்தூரைச் சேர்ந்த வீரபாண்டி மகன் மாரிமுத்து என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் 21.30 மணிக்கு வந்து கணியூர் காவல் நிலைய குற்ற எண். 144/2018 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 உடுமலைக்கு சமர்ப்பித்தும் அதன் ஒரு நகலை விசாரணைக்காக உதவி

ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்